Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 67 துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள் சங்.9:17 நவம்பர் 2021 No.11

தேவனையும் பிறரையும் நேசிக்க பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்தல்

Teaching children to love God and Others

Kim Butts

".... இஸ்ரவேலே கேள் .... உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல பிறரிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை" மாற்கு 12:29-31.

நாம் ஆபத்தான ஒரு காலாச்சார காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக இது கெட்ட குறிகளைக் காட்டும் காலமாயிருக்கிறது. நாம் வாழும் சமுதாயம் ஆண்டவரையும் அவரது வார்த்தையையும் அவமதிக்கிற ஒரு சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அநேக கிறிஸ்தவ குடும்பங்கள் இக்கலாச்சாரங்களுக்கு அடிமைப்பட்டு விட்டன. பிள்ளைகளிடம் மிக முக்கியமானது என்னவென்று கேட்டால் அவர்களுடைய பதில் உங்களை திடுக்கிடப் பண்ணலாம். பெற்றோரே, நமது பிள்ளைகளுக்கு நல்ல பயிற்சி அளிக்க கடமைப் பட்டிருக்கிறீர்கள். நாம் இடுக்கமான வாசல் வழியாக பிரவேசிக்கப் பிரயாசப் பட்டாலும் சாத்தான் தீய நோக்கத்தோடு கவனச் சிதறலை ஏற்படுத்தி அகலமான பாதையில் திருப்பிவிடுகிறான்.

முன்னாலிருக்கும் காலத்தை சந்திக்க உங்கள் பிள்ளைகள் ஆயத்தமாயிருக்கிறார்களா? அவர்கள் தேவனை தங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் நேசிக்கிறார்களா? தேவனை மகிமைப்படுத்தும் வகையில் அவர்களுடைய பேச்சும் செயலும் இருக்கிறதா? தங்களைப் போல பிறரிடத்திலும் அன்புகூருகிறார்களா? அவர்களது சேவை, கொடை, இரக்கம் ஆகியவை ஆவியின் கனியாக வெளிப்படுகிறதா? ஒவ்வொரு நாளும் ஜெபத்தின்மூலம் தேவனை நெருங்கக் கற்றுக் கொள்கிறார்களா? அல்லது ஜெபிக்கிறார்களா? வேத வசனங்களைப் படிக்கவும், மனப்பாடம் செய்யவும் தியானிக்கவும் செய்கிறார்களா? இழந்து போன இந்த உலகம் கிறிஸ்துவிடம் சேர்க்கப்பட வேண்டும் என்ற ஆவல் அவர்களிடமுண்டா?

உலகம் இருளடைந்து கொண்டேயிருக்கிறது. சாத்தான் மக்களை இயன்ற அளவு அழிக்கத் தீர்மானித்து செயல்படுகிறான். குறிப்பாக அவன் பிள்ளைகள் மேல் நோக்கமாயிருக்கிறான். நாம் சேவிக்கும் கர்த்தர் உயிரோடிருக்கிறார். சாத்தான் நமக்குச் செய்யத் திட்டமிடும் எல்லாவற்றிற்கும் மேலாக அவர் நம்மில் அன்பு செலுத்துகிறார். நாம் தேவ ஒத்தாசைக்காக நம்முடைய பிள்ளைகளுக்கு பதிலாக தேவனிடத்தில் முழங்காற்படியிட வேண்டும். அவரால் கூடாதது ஒன்றுமில்லை.

உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூருங்கள்

உங்கள் பிள்ளைகள் தேவனிடத்தில் அன்புகூரும்படி பத்துக் கற்பனைகளில் முதல் நான்கு கற்பனைகளையும் பயிற்சியுங்கள்.

முதல் கட்டளை:

யாத்.20:3-ல் கூறப்பட்டுள்ள "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்". ஒரே ஒரு தேவன்தான் உண்டு என்பதைப் பிள்ளைகளுக்குப் போதியுங்கள். இயேசு கிறிஸ்து மூலமாகவே தேவனை அடைய முடியும் என்பதையும் அவரே ஒரே வழி என்பதையும் அவர்கள் அறியட்டும். உலகில் எத்தனை தெய்வங்கள் வணங்கப் பட்டாலும் கிறிஸ்து ஒருவரே சத்தியம். குடும்பமாக அவரை ஆராதியுங்கள். ஒவ்வொரு நாளும் சங்கீதங்களை வாசித்து பாடல்களைப் பாடி ஜெபியுங்கள்! அவர் ஒருவரே துதிக்குப் பாத்திரர்.

இரண்டாம் கட்டளை:

யாத்.20:4-5 உங்கள் இல்லத்தில் விக்கிரகங்களாக இருக்கிறவைகளை அதாவது உங்கள் சமயம் எண்ணம் போன்றவற்றை இழுத்துக்கொள்ளுகிற தொலைக்காட்சி மடிக்கணினி போன்ற வற்றை குறித்து பேசுங்கள். தேவனை விட எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களோ அவை உங்களுக்கு விக்கிரகமாயிருக்கிறது. அதைக் குறித்து என்ன செய்ய வேண்டுமென்று தீர்மானம் செய்யுங்கள்.

மூன்றாவது கட்டளை:

யாத்.20:7 உங்கள் பிள்ளைகள் பயன்படுத்துகிற வார்த்தைகளைக் குறித்துக் கவனமாயிருக்கும்படி போதனை செய்வீர்களாக. எந்தச் சூழலிலும் அவர்கள் ஆண்டவரை கனம் பண்ண வேண்டும். அவர் நாமம் பரிசுத்தமானது. "கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்" சங்.29:2. இந்த வசனத்தை சேர்த்து சொல்லுங்கள்.

நான்காவது கட்டளை:

யாத்.20:8 ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. இந்த நாளைக் குடும்பத்தோடு சந்தோஷமாக இருக்கவும் ஆராதனையிலும் ஜெபத்திலும் செலவிடவும் பழக்குங்கள். அதனால் வரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வீர்கள்.

உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக

ஆண்டவரிடத்தில் அன்பு கூருகிறவர்கள் பிறரை நேசிப்பார்கள். பின்பு வரும் ஆறு கற்பனைகள் மூலமாக பிறரிடம் நாம் அன்பு கூருவதை வெளிப்படுத்துகிறோம்.

ஐந்தாம் கட்டளை:

யாத்.20:12 பெற்றோரே இது மிக முக்கியம். பிள்ளைகள் உங்களை கனம் பண்ணாவிட்டால் அவர்கள் எப்படி தேவனை கனம் பண்ணுவார்கள்? எப்படி பிறரை மதிப்பார்கள்? "பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்" நீதி.22:15. அவர்கள் மரியாதையுடன் பேசவும் நடந்துகொள்ளவும் கற்றுக் கொடுங்கள். கனவீனம் அவர்கள் உள்ளங்களில் வளரவிட வேண்டாம். அது ஒரு முறை வேர் ஊன்றிவிட்டால் அது பரவி விடும். நீதிமொழிகளின் புஸ்தகத்தில் பிள்ளைகளுக்குரிய புத்திமதிகள், பெற்றோருக்குரியவைகள் மற்றும் அனைத்துக் கற்பனைகளைக் குறித்த போதனைகள் இருப்பதால் குடும்பமாக வாசியுங்கள்.

ஆறாம் கட்டளை:

"கொலை செய்யாதிருப்பாயாக" *யாத்.20:13.* கருவிலிருந்து அனைத்து உயிர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்க போதனை கொடுக்கப்பட வேண்டும்.

ஏழாம் கட்டளை:

"விபசாரம் செய்யாதிருப்பாயாக" *யாத்.20:14* திருமணத்துக்கு முன்பாக கற்புடன் வாழவும், திருமணமான பின் கணவன் மனைவி ஒருவருக்கொருவர்

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

மணியாடர் அனுப்பும்போது, கீழே இருக்கும் மாதிரிபடி உங்கள் பதிவு எண்ணை கட்டாயம் எழுதுங்கள்.

Pr. Arputharaj E. VN 00980 M
Srivilliputhur - 626 138.
Phone : 9786xxxxxx

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப

1. வருகையின் தூதன் ஊழியத்தை **தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.**
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.
3. உங்கள் பிறந்த நாள், திருமண நாள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் பிறந்த நாள் போன்ற மகிழ்ச்சியான தினங்களில், ஆண்டவருடைய ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பி ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெறுங்கள்.

இம்மாத பொன்னான சிந்தனை

சிறு தவறு பெரும் விளைவு

யோனா ஒரு தீர்க்கதரிசி, யோனா ஒரு ஊழியன். அவனை நினிவேக்கு போய் அதற்கு விரோதமாக பிரசங்கிக்கும்படி கர்த்தர் கூறி அனுப்பினார். நினிவேயின் மக்கள் அக்காலங்களில் பயங்கரவாதிகளாக இருந்ததால் அவர்களுடைய மனந்திரும்புதலை விரும்பாத யோனா தர்ஷீசுக்குப் போக கப்பல் ஏறினான். கப்பல் பயணத்துக்கு அவனுக்கு பணம் இருந்தது. கப்பல் தயாராக இருந்தது. கப்பலில் தூங்கும் வசதியும் இருந்தது. தேவனுடைய சித்தத்துக்கு மாறாகப்போக அவைகள் அவனைத் தூண்டின. பொல்லாங்கானவன் அவனுக்கு இவைகளெல்லாவற்றையும் ஒழுங்குப்படுத்திக் கொடுத்திருந்தாலும் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய சமூகத்திலிருந்து அவருடைய ஊழியனை விலக்க அவனால் முடியவில்லை. இவ்வுழியன் தன் மாம்சத்தில் எடுத்த முடிவினிமித்தம் அவன் மாத்திரமல்ல கப்பலிலிருந்த அனைவருமே பாதிக்கப்பட்டனர். கப்பல் சரக்குகளுக்கு நஷ்டம் வந்தது. அவனை என்ன ஜாதியான் என மற்றவர்கள் கேட்க நேரிட்டது. இவ்விதமாய் ஒரு ஊழியன் இருக்கக் கூடாத இடத்தில் இருந்து, முடிவில் மீன் வயிற்றுக்குள் செல்ல வேண்டியதாயிற்று. கர்த்தருடைய ஊழியத்தை கர்த்தர் சொல்லுகிற இடத்தில் சொல்லுகிற பிரகாரமாக செய்கிற தேவ ஊழியனின் ஊழியமும் சாட்சியும் மகா மேன்மையுள்ளதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கர்த்தருடைய சமூகத்தை விட்டு ஒருவருக்கும் தெரியாமல் தானே செல்லுகிறேன் என யோனா நினைத்திருக்கலாம். ஆனால் அதனால் அவன் அடைந்த வேதனைகளும்பாடுகளும்சாட்சியின்மையும்அதிகம். இப்படிப்பட்டநிலைமைக்குள் போகாதபடி நம்மை கர்த்தருக்குள் காத்துக் கொள்ளுவோமாக.

வாக்குத்தத்தம்

வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும் நீதி.11:24,25.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2021 நவம்பர் மாத தூதனுக்காக என் தேவனை அதிக நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும் துதிக்கிறேன்.

இம்மாதம் எனது தகப்பனார் பாஸ்டர் **S.தேவதாசன்** *(13.08.1905-13.11.2005)* முன்னாள் வருகையின் தூதன் ஆசிரியர் *(1955-1999)* அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையை அச்சிடுவதால் அதற்கு முன்பாக, முகவுரையாக நான் எதுவும் எழுதவில்லை.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிறவர்கள், தயவாய் உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்
9489740295, 9543221008

உங்கள் சகோதரன்
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

உங்கள் பண்டிகைகளை என் ஆத்துமா வெறுக்கிறது ஏசாயா 1:14

பெர்கமு சபைக்கு ஆவியானவரின் செய்தி

(வெளி.2:12-17-ல் காணும் இச்செய்தியை ஜெபத்தோடு படித்து விட்டு இக்கட்டுரையைப் படியுங்கள்)

பெர்கமு நகரம்

சிமிர்னாவுக்கு நேர் வடக்காய் 50 மைல் தொலைவில், வட்ட வடிவமாய் உயர்ந்த ஓர் அழகிய பீடபூமியின் மேல் பெர்கமு அலங்காரமாய் அமைக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு நகரமாகையால் எபேசு, சிமிர்னாபோல் கப்பல் போக்கு வரத்துக்கும் வியாபார விருத்திக்கும் வசதியற்றதாயிருந்த போதிலும் மற்றெல்லாக் காரியங்களிலும் லண்டன், பாரீஸ், பெர்லின் போன்ற பிரபல நகரமாய் விளங்கிற்று.

"ராஜரீக நகரம்" என்ற புகழ் நாமம் பெற்ற பெர்கமு ஆசியாவின் தலைநகராகவும் இருந்தது. பிரசித்தி பெற்ற அரசர் பலர் அங்கு தங்கி நாட்டை ஆண்டு வந்தனர். ரோமை அரசனின் பிரதிநிதி ஒருவனும் அங்கிருந்தான்; அவனுடைய சின்னம் வாள். எவரையும் பட்டயத்துக்கிரையாக்கும் அதிகாரம் அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த சபைக்கே கர்த்தர் தம்மை "இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை" உடையவராக வெளிப்படுத்துகிறார். ரோமை அதிகாரியின் பட்டயம் சரீரத்தை மாத்திரம் கொலைசெய்யும். தேவனுடைய பட்டயமோ சரீரத்தையும் ஆத்துமாவையும் நரகத்திலே தள்ளும் மத்.10:28.

பெர்கமு நாகரீகத்தில் மிக முன்னேற்றமடைந்தது. அங்குள்ள சர்வ கலாசாலைகள் கீர்த்தி வாய்ந்தவை, விஞ்ஞானத்திலும் மருத்துவத் துறையிலும் அது முதலிடம் பெற்றது. அங்குள்ள நூல் நிலையத்தில் 2 லட்சம் புத்தகங்கள் உண்டாயிருந்ததாம். பக்குவப்படுத்தப்பட்ட தோலில் கையால் எழுதும் அக்காலத்தில் இத்தனை பெரிய நூல் நிலையம் இருந்தது ஆச்சரியமே. எழுதுவதற்காகத் தோலை முதன் முதலாவதாகப் பயன்படுத்தியது பெர்கமுதான்.

பெர்கமுவிலுள்ள மார்க்கம்

இவ்வுலகத்தின் அதிபதியும் (யோவா.12:31) இப்பிரபஞ்சத்தின் தேவனுமான சாத்தான் (2 கொரி.4:4) தான் ஆதாமிடமிருந்து அபகரித்துக்கொண்ட உலகத்தை ஆளுகை செய்ய பாபிலோன் என்னும் பாபேலையே தலைநகராய்த் தெரிந்து கொண்டதால், அங்கேயே அவனுடைய சிங்காசனம் நிலை நாட்டப்பட்டது. அங்கே பேய் வணக்கத்தையும் விக்கிரகாரா

(5-ம் பக்கம் பார்க்க)

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை ***(Cheque & Draft)***
வெஸ்லி தேவதாசன் **(WESLEY DEVADASON)**
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள்
Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **3706010000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

உண்மையாயிருப்பது குறித்தும் போதிக்கப்பட வேண்டும்.

எட்டாம் கட்டளை:

"களவு செய்யாதிருப்பாயாக" *யாத்.20:15.* பிடிக்கப்படும் வரைக்கும் எதையும் செய்யலாம் என்கிற சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எந்தத் தவறான காரியத்தையும் செய்யக் கூடாது என்பதையும், தங்களுடைய தல்லாத எதையும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதையும் திட்டமாய்ப் போதிப்பது அவசியம்.

ஒன்பதாம் கட்டளை:

"பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக" *யாத்.20:16.* உண்மை தேவனுக்குப் பிரியமானது என்றும் உண்மையற்ற எதையும் பேசுவதும் செய்வதும் தவறு என்பதையும் சிறுவயதிலிருந்தே பிள்ளைகள் அறிவுறுத்தப்பட வேண்டும். பொய்யை பயன் படுத்தினால் பிறர் அவர்கள் மேல் நம்பிக்கை கொள்வ தில்லை. பிறரை நேசிப்பதிலும் பேச்சிலும் செயலிலும் உண்மையிருக்க வேண்டும் என்பது அறிவுறுத்தப்பட வேண்டும்.

பத்தாவது கட்டளை:

யாத்.20:17 "பிறனுடைய ..... இச்சியாதிருப்பாயாக". இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்கு நமக்கிருக்கும் பொருட்களால் திருப்திபடுவதும் பிறரிடம் இருப்பதை ஆசைப்படாமலிருப்பதுமாகும் *(பிலிப்பி.4:11-13 படிக்க)*

இவைகளுக்கு நாம் கீழ்ப்படிவது தேவனுடைய எதிர்பார்ப்பு. நமது பிள்ளைகளையும் இந்தப் பாதையில் நடத்துவோம். இவைகளைக் குறித்து எப்போதும் பிள்ளைகளோடு பேச வேண்டும் என்று *உபா.6:4-9* வசனங்களில் படிக்கிறோம்.

"நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்பு கூருகிறோமென்று அறிந்து கொள்ளுகிறோம் *1 யோவா.5:3.*

ஆவியால் நிரப்பப்பட்ட நபருடைய அன்பு

The love of the spirit filled person

Wesley Duewel (1916-2016)

ஒரு கிறிஸ்தவன் மலையின் மேலிருக்கிற பட்டணம் போன்றவன் *(மத்.5:14)* அது மறைந்திருக்கமாட்டாது. உலகம் நம்மைக் கவனித்துக் கொண்டிருப்பதற்காக அவரைத் துதிப்போம். ஏனெனில் இது தேவனுக்கு மகிமையைக் கொண்டு வரக்கூடிய ஒரு வாய்ப்பு. ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களால் கிறிஸ்தவரல்லாதோர் இடறுதலடைவதுமுண்டு. காரணம் அவர்களில் ஒளியில்லை.

உலக மக்கள் தேவனையும் அவருடைய இரட்சிப்பையும் நியாயப்படுத்துவது நம்மில் காணப்படும் கிரியைகளைக் கொண்டுதான். ஆவியானவர் மூலமாக செய்யப்படும் ஊழியத்தின் மூலமாக தேவ அன்பு நம்மில் ஊற்றப்படுவதை அவர்கள் பார்க்க முடிவதில்லை. நமது வெளிப்படையான செயல்களில் நாம் வெளிப்படுத்தும் அன்பின் மூலமாகவே அதனை அறியக் கூடும். அவர்களை விட நாம் உயர்ந்த அந்தஸ்தோடு வாழுவதை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

நமது பாவங்களைக் குறித்து நாம் கண்மூடித்தனமாயிருக்கலாகாது. அவற்றை தாழ்மையுடன் ஒப்புக்கொள்ள வேண்டும். நாம் நமது வார்த்தைகளில் கவலையீனமாகவும் செயல்களில் கடினமாகவும் இருக்கக் கூடாது. மக்கள் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் ஆவியின் கனிகளை வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் மக்கள் கிறிஸ்துவிடம் இழுக்கப்பட்டு தேவநாமம் மகிமைப்படும்.

எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் மிக உயர்வான நல்லொழுக்க வாழ்வை நம்மிடம் எதிர்பார்க்கிறார். நம்மைப் பரிசுத்தப்படுத்த தேவன் தமது குமாரனை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார். நமது இரட்சிப்புக்காகக் கிறிஸ்து கிரயம் செலுத்தினார். நாம் குற்ற உணர்விலிருந்தும் பாவத்தின் வல்லமையிலிருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கிறோம். தூய ஆவியானவர் நம்மில் வாழ்ந்து கிரியை செய்வதன் மூலம் நாம் கழுவப்படுவது மட்டுமல்ல, நாம் பேசுவதிலும் செயலிலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். நமது பரிசுத்த திரியேக தேவனை துக்கப்படுத்தக் கூடாது. பிற ரோடுள்ள நமது தொடர்பு எப்போதும் பரிசுத்தமாகக் காக்கப்படுவது அவசியம்.

ஆவியால் நிரப்பப்பட்டவர்களில் காணப்படுவது உண்மையான அன்பு. அதைக் குறித்து *1 கொரி.13-ல்* படிக்கிறோம். நாம் தேவனால் நிரப்பப்படும் போது இந்த அன்பால் நிரப்பப்படுகிறோம். ஏனென்றால் தேவன் அன்பாகவே இருக்கிறார் *1 யோ.4:8.* ஆதாம் முதலிலிருந்ததுபோல நாம் சரீரத்திலும் ஆவியிலும் பரிசுத்தமாயிருக்க முடியாது. ஆனால் அன்பில் நாம் பூரணராக முடியும். ஏனெனில் தேவன் நமது அன்பைதூய்மைப்படுத்துகிறார் *4:17-18.* நமது அன்பு எல்லையற்றதாயிருக்க முடியாது. ஆனால் தூய ஆவியானவரை நாம் பின்பற்றும்போது அது பெருகி வரும்.

தேவனுடைய மீட்பின் அன்பை, கிறிஸ்துவை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதால் நாம் ஆவியால் நிரப்பப்பட்டவர்களாய் தொடர்ந்து வாழலாம். ஒரு மிஷனெறி பாரத்தோடு கல்வாரி அன்பை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். மீட்கும் அன்பு ஒரு பொறுப்புணர்ச்சியுடையது. அது பிறருடைய இரட்சிப்புக்காகக் கவலைப்படுகிறது. அது அண்டைவீட்டிலிருந்து ஆரம்பிக்கிறது *(எருசலேம் அப்.1:8)* அங்கிருந்து தான் உலகத்தில் எல்லை பரியந்தம் அது அறிவிக்கப்பட வேண்டும்.

மீட்பின் அன்பு அதைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களின் தகுதியைப் பொறுத்ததல்ல. அந்த அன்பு மிகவும் தீயவர்களுக்கும் படித்தவர்களுக்கும் நல்ல கலாச்சாரமுடையவர்களுக்கும் ஒன்றுபோல எட்டுகிறது. நம்பிக்கையுடன் வாழுகிறவர்களுக்கும் நம்பிக்கையற்ற நிலையிலுள்ளவர்களுக்கும் அன்பைக் காண்பிக்கிறது. ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவன் ஆத்தும ஆதாயத்தில் விருப்பமுள்ளவனாக இருப்பான். ஏனெனில் இந்த அன்பு பரிசுத்த ஆவியால்தான் உருவாகிறது. பிறருடைய தேவைகளுக்குத் தங்கள் இருதயத்தை அடைத்துக் கொள்ளுகிறவர்கள் பரிசுத்த ஆவியை இழந்துவிடும் ஆபத்திலிருக்கிறார்கள்.

மீட்கும் அன்பு செயல்முறையில் இடுக்கண்களிலிருந்து மக்களுக்குத் தீர்வு காணவும், உடைந்த உறவுகளைச் செப்பனிடவும் உதவுகிறது. ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் இரட்சிக்கப்படாதவர்களை கிறிஸ்துவின் மறுரூபப்படுத்தும் அன்புக்குள் கொண்டு வரவும் தங்கள் உடன் விசுவாசிகளுக்குச் சேவை செய்யவும் கடன்பட்டவர்கள். இந்த அன்பு அவர்களது தேவைகளை இயன்ற வரை சந்திக்கவும் முயற்சிக்கிறது. இத்தகைய அன்பு சுயநலமற்றதும், விட்டுக் கொடுக்கிறதும், தாழ்மையுள்ளதும், பிறருக்கு சேவை செய்ய தொடர்ந்து தேடிக் கொண்டிருப்பதுமாயிருக்கிறது. மேலும் பிறருடைய கால்களைக் கழுகக் கூடியதுமாயிருக்கிறது *(யோவா.13:4-5; 15 படிக்க)*

இதுவே ஆவியால் நிரப்பப்பட்டவர்களிடத்தில் காணப்படும் பரிசுத்தமான மீட்கும் அன்பு. மற்ற கனிகள் இதிலிருந்துதான் புறப்படுகின்றன *(கலா.5:22-23)* நாம் வாஞ்சித்துக் கேட்கும் போது அது பெருகும். எனென்றால் கேட்கிறவன் பெற்றுக் கொள்கிறான் *லூக்.11:13.* இவ்வாறு தொடர்ந்து ஆவியால் மறுரூபமடைந்து கிறிஸ்துவின் சாயலைப் பெறுவோம். ஆவியானவர் அவரது ஒத்தாசையால் நம்மை எழுப்பு தலுக்கு மையமாகவும் ஆசீர்வாதமாகவும் நாம் இருக்கிற இடங்களில் பயன்படுத்துவார். பிறர் நம்மைப் பார்த்து தேவனைப் பற்றி அறிய ஆசைப்படுவார்கள்.

மன்றாட்டு ஜெபம்

மன்றாட்டு ஜெபம் மற்ற ஜெபங்களைவிட வேறுபட்டது. அது சிறுபிள்ளை ஒன்று தகப்பனிடத்தில் தன் தேவைகளைக் கேட்கும் ஜெபத்தைப் போன்றது அல்ல. மன்றாட்டு ஜெபம் தேவனிடம் இரந்து வேண்டுவதாகும். அது தேவ இரக்கத்தை மக்கள் பெறும்படியாக திறப்பின் வாசலில் நிற்கிற ஜெபம். அது மக்களின் அவல நிலையைக் குறித்து மிகுந்த இரக்கம் கரிசனை மற்றும் பாரத்தோடு ஜெபிப்பது. அது தேவனுக்கு முன்பாக இதயத்தை தண்ணீரைப் போல ஊற்றி விடுவது அது உணர்ச்சிகளையும் துக்கத்தையும் வெளிப்படுத்தும் கண்ணீரோடும் பெருமூச்சோடும் வேண்டுவது.

தேவனுடைய அன்பு

The love of God

Arthur W.Pink (1886-1952)

"தேவன் அன்பாகவே இருக்கிறார்" *(1 யோவா.4:8)* அவர் அன்பு கூருவது மட்டுமல்ல அவர் அன்பாகவே இருக்கிறார். அவரது குணங்களில் ஒன்று அன்பு என்பதல்ல. அவரே அன்பாயிருக்கிறார். அவரது தன்மையே அன்புதான். அவரது அன்போடு நாம் அதிகம் அதிகமாக அறிமுகமாகும்போது அந்த அன்பின் குணாதிசயம், நிறைவு, ஆசீர்வாதம் ஆகியவற்றிற்கு நேராக நமது இருதயம் அன்பினால் இழுக்கப்படும்.

தேவ அன்பை மாற்றமுடியாது. அந்த அன்பை நடைமுறைப்படுத்தவோ, கவர்ந்துகொள்ளவோ எந்த ஏதுவுமில்லை. ஒரு மனிதன் இன்னொரு வருடன் அன்புகொள்ள ஒரு காரணம் இருக்கலாம். ஆனால் தேவ அன்பு இலவசமானது. தானாகவே பெருக்கெடுத்து ஓடக்கூடியது. "அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" *1 யோவா. 4:19.* ஒரு துளி அளவும் நாம் அன்பு காட்டாதபோது தேவன் நம்மிடத்தில் அன்பு கூர்ந்தார்.

தேவ அன்பு நித்தியமானது

எரே.31:3-ன் படி "ஆம் அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தேன். ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்வேன்". இதனால் அவரது பிள்ளைகள் எவ்வளவாக அவரைத் துதிக்க வேண்டும்! தேவன் எனக்கு நேராகக் காண்பிக்கும் அன்புக்கு ஆரம்பமும் முடிவுமில்லை என்பது எத்தனை இன்பமான செய்தி.

தேவ அன்பு எல்லையற்றது

தேவனைப் பற்றிய அனைத்து காரியங்களுமே எல்லையற்றவைதான். அவரது ஞானம் எல்லையற்றது. அவர் கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் அனைத்தையும் அறிபவர். அவரது வல்லமை எல்லையற்றது. அவரால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. அவரது அன்பும் எல்லையற்றது. அதின் ஆழத்தையும் உயரத்தையும் எவரும் அறியமுடியாது. அதின் நீளத்தையும் அகலத்தையும் மனித அளவுகோலாலும் அளக்க முடியாது. "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே ....." *(எபே.2:4)* மிகுந்த அன்பு என்பது யோவான் *3:16*-ல் கூறப்பட்டிருக்கும் 'இவ்வளவாய் அன்பு கூர்ந்தார்' என்பதற்கு இணையானது. அதாவது இது அளந்து பார்க்க முடியாதது. இந்த அன்பு அறிவுக்கெட்டாதது எபேசி.*3:19.*

தேவ அன்பு குறையாதது

"அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" யாக்.*1:17.* அவரது அன்பு மாறுவதோ குறைவதோயில்லை. "திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது; வெள்ளங்களும் அதை தணிக்க மாட்டாது உன்ன.*8:7.* அன்பிலிருந்து ஒருவரைப் பிரிக்க முடியாது ரோமர் *8:35-39.*

தேவ அன்பு தூய்மையானது

தேவ அன்பு எந்தவிதமான உணர்வுகளாலும் மாற்றமடைவதில்லை. அது நமது நீதியினாலல்ல, அவரது கிருபையினால் நமது இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது ரோமர்.*5:21.* எனவே அவரது அன்பு பரிசுத்தத்திற்கு எதிராயிருப்பதில்லை. தேவன் ஒளியாயிருக்கிறார் *1 யோவா.1:5* என்பது தேவன் அன்பாயிருக்கிறார் என்பதற்கு முன்னதாகக் கூறப்பட்டுள்ளது *1 யோவா.4:8.* தேவனுடைய அன்பு இனிய பலவீனமோ அல்லது மென்மைத் தன்மையோ உடையதல்ல எபி.*12:6*-ன்படி "கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்ந்து கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். அவர் பாவத்தைப் பார்த்து பாரா முகத்தோடிருப்பதில்லை. அவர் அன்பு கலப்பற்றது.

தேவ அன்பு கிருபை நிறைந்தது

தேவ அன்பும் பரிவும் பிரிக்கமுடியாததுமாகும். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அளித்து இவ்வுலகில் அன்புகூர்ந்தார்" யோவா.*3:16.* தேவன் நம்மை நேசிப்பதற்காக கிறிஸ்து மரிக்கவில்லை, ஆனால் அவர் தமது ஜனத்தை நேசித்தபடியால் மரித்தார். தெய்வீக அன்பின் உயர்ந்த விளக்கம் அவரது கல்வாரி மரணம் . எப்போதாவது தேவ அன்பில் சந்தேகம் வந்தால் கல்வாரிக்குச் செல்லுங்கள்.

தேவ அன்பை உலகுக்குச் சொல்ல அழைக்கப்பட்டோம்

Called to tell the world of God's Love

Andrew Murray (1828-1917)

வேதபகுதி : யோவான் 3:16

இதில் வரும் "எவனோ" என்ற வார்த்தை என்னைக் குறிக்கிறது. அதில் அன்பு, குமாரன், ஜீவன் யாவும் எல்லாம் எனக்குரியவைகள் என்று ஒத்துக் கொள்ளுகிற தைரியமுடைய ஆயிரக்கணக்கான மக்கள் நம்மிலுண்டு. ஆனால் இது எல்லோருக்கும் உரியது, யாரும் இதற்கு புறம்பானவர்களல்ல.

தேவனுடைய அன்பு வெளிப்படுத்தப்பட்டபோது கிறிஸ்து பங்காளிகளாக தமது ஜனத்தை ஏற்படுத்தியிருக்கிறார். எனவே அவர்கள் மீது சார்ந்து, தமது பணியைத் தொடரவும் பூர்த்தி செய்யவும் அவர் விரும்புகிறார். 'நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' மாற்.*16:15* என்ற மகத்துவமான கட்டளையை இயேசு கூறி இருபது நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. ஆயினும் திரளான மக்கள் அவரைக் குறித்து இன்றும் அறியவேயில்லை.

'எவனோ' என்ற வார்த்தை சூரியன் அளவற்ற கறையற்ற மகிமையுடன் இருளான உலகத்தின்மீது பிரகாசிப்பது போல அனைவர் மேலும் இறங்கி வருகிறது. அவருடைய வல்லமையிலும், ஆசீர்வாதத்திலும் பங்குள்ளவர்கள் அவருடைய உறவில் வாழ்பவர்களாகும். அவர்கள் அவரைப் போல வாழ்ந்து மரித்து அவரை அறிவிக்கிறார்கள்.

அழிந்து கொண்டிருக்கும் உலகத்தை விசுவாசத்தோடும் ஊக்கத்தோடும் நோக்கும்படியாகக் கண்களைத் திறக்கும்படியும், தேவனுடைய பார்வையில் அழியும் உலகத்தை காணும் படியாகவும் ஜெபிப்போம்.

தேவனுடைய இரட்சிக்கும் அன்பு

அறிவுக்கெட்டாத அன்பு நமது கருத்துக்கு மாறுபட்டது. அவருடைய இருதயத்திலிருந்து இடைவிடாமல் அன்பும் வாஞ்சையும் ஒவ்வொருவரையும் இரட்சிக்கவும் ஆசீர்வதிக்கவும் பாய்ந்து வருகிறது. அழிந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆத்துமா மீதும் அவரது அன்பு தங்கியிருக்கிறது. இந்த அன்பு நம்மை நிரப்ப நாம் தேவனுக்குக் காத்திருந்து தேவ ஆவியானவர் அதனை அறிந்து உதவி செய்யும்படி வேண்டிக் கொள்ளாவிட்டால் மனம் இதனை அறியாது.

தமது குமாரனை இவ்வுலகுக்கு அனுப்பியதன் மூலம் தேவ அன்பு நிரூபிக்கப்பட்டது. மனிதன் தன்னோடு ஒப்புரவாக கிறிஸ்துவை மனிதனாக அனுப்பினார். இதனால் தேவனுடைய தெய்வீகத் தன்மைக்கு நாம் பங்காளிகளாகிறோம். அவரது அன்பு எவருக்கும் உரியது. மிகவும் தாழ்வானவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள் நம்பிக்கையற்றவர்கள் போன்ற எவரையும் அவரது அன்பு தள்ளிவிடுவதில்லை.

இந்த அன்பை வெளிப்படுத்தவே கிறிஸ்து இயேசு இவ்வுலகில் அவர் அன்பைக் குறித்துப் பேசி, அதற்காக வாழ்ந்து அதை நமக்கு அளிக்கவே மரித்தார். அவரது நோக்கம், வாஞ்சை, மகிமை, பெலன் எல்லாம் அன்பு ஒன்றே. அவரது ஜீவன் அன்பாகவே இருந்தது. அது ஒன்றே அவரது மகிழ்ச்சியாயிருந்தது. "நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலும் இருக்கும்படி ....." யோவா.*17:26* என்று அவர் ஜெபித்தபோது இந்த அன்பு அவர்களில் காணப்படவும் இதற்காக அவர்கள் வாழவும் இதனால் வரும் மகிமை ஆசீர்வாதம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளவும் அதை அவர்கள் அறிவிக்கவும் அவர் உள்ளம் வாஞ்சித்தது.

சுவிசேஷம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

ஜீவனை அளித்த கிறிஸ்துவின் அன்பை எண்ணிப்பாருங்கள் யோவா.*3:16.*

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

அவரை விசுவாசிக்கிறவர்கள் அவரை விட்டுப் பிரிக்க முடியாமல் இணைக்கப் பட்டிருக்கிறார்கள். கேள்விப்படாமல் எப்படி விசுவாசிப்பார்கள்? ரோமர் 10:14. அதற்கும் வழி திறக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விசுவாசியும் சபை யாகிய சரீரத்தின் ஒவ்வொரு அவயமும் இந்த அன்பு, மகிமை, ஜீவன் ஆகிய வற்றை பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு விசுவாசியின் வாழ்வும் விதையாயிருந்து கனி தர வேண்டும்.

ஒவ்வொரு விசுவாசியும் மரத்தின் கிளையாக எஜமானுக்கு கனியையும் ஆசீர்வாதத்தையும் மகிமையையும் கொண்டு வர வேண்டும். மனிதரும் பயனடைய வேண்டும். தேவன் காண் பித்த அன்பு, நித்திய ஜீவன் ஆகியவை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆயிரக்கணக்கான மக்கள் நமது கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கி றார்கள். மிக அவசரமாக சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். அதற்காகப் பொருளாதார உதவி செய்வ தோடு காலத்தையும் செலவு பண்ண வேண்டும். தேவ அன்பை மக்களுக்கு அளிக்க வாய்க்கால்களாக நாம் பயன் பட வேண்டும்.

நாம் அறியாமையிலிருந்தாலும் இந்தப் பணியின் முக்கியத்துவத்தை உணராமலிருந்தாலும் நம்மை தேவனுக்கு முற்றிலும் அர்ப்பணித்து, அவருக்காக வாழும்போது அவர் நம்மைத் தூண்டி, வழிநடத்தி வேண்டிய தைரியத்தையும் அளிப்பார்.

இவ்விதமான எழுப்புதல் நம்மில் ஏற்பட்டால் அது பரவுவது நிச்சயம். ஜெபத்தில் புதிய நம்பிக்கையும் பணியில் புதிய வல்லமையும் கிடைக்கும். நமது பணி நமக்கு சந்தோஷத்தைத் தரும். இந்தப் பெரிய சுவிசேஷப் பணியில் ஒரு பயபக்தி ஏற்படும். அது கிறிஸ்துவின் அன்பினால் ஏற்படுகிறது. அதன் நியதி கிறிஸ்துவின் வாழ்வின் மூலமாகவும் அதன் பெலன் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் கிடைக்கிறது. அவர் தேவ னோடு நம்மை இணைத்து தேவனுக்காக உலகத்தை ஆதாயம் பண்ண உதவி செய்கிறார்.

நமது தோல்வியின் இரகசியம் நாம் தேவனை பார்ப்பதற்கு பதிலாக மனிதரைப் பார்க்கிறோம். மார்ட்டின் லூதர் தேவனை சந்தித்த போது ரோம மார்க்கம் நடுங்கியது. ஜோனத்தான் எட்வர்ட்ஸ் தேவனை தரிசித்தபோது மிகப்பெரிய உயிர்மீட்சி ஏற்பட்டது. ஜான் நாக்ஸ் தேவனைக் கண்ட போது ஸ்காட்லாந்து முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்தது. ஜான் வெஸ்லி தேவனை நோக்கிப் பார்த்தபோது உலகம் முழுவதும் ஆராதனைக் கூடமாயிற்று. ஜார்ஜ் முல்லர் தேவனை தரிசித்தபோது ஆயிரக்கணக்கான அனாதைகள் போஷிக்கப்பட்டனர். அதே மாறாத தேவன் இன்றும் ஜீவிக்கிறார்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

தனையையும் ஆரம்பித்தவனும் பரவச் செய்தவனும் நிம்ரோத் என்பவனே. "இவன் கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனாயிருந்தான்" என்றும் (ஆதி.10:9)" பூமியிலே பராக்கிரமசாலியா யிருந்தான்" என்றும் (1 நாளா.1:10) தேவ வசனம் கூறுகிறது. இங்கு "வேட்டைக் காரன்" என்று திருப்பியிருக்கும் பதம் "பட்சிக்கிறவன்" அல்லது "கொடுமை யாய்த் துன்புறுத்துகிறவன்" என்று பொருள்படும். "நிம்ரோத்" என்னும் பதத்தின் பொருளே "கலகம்" என்பது தான்.

இவனைக் குறித்துப் பூர்வ எபிரேய கிரந்தங்கள் "பாவத்தில் கொடியவன், குற்றமற்றவர்களைக் கொலை செய்த வன், தேவனுக்கு எதிரானவன்" என்றும் "யுத்தப்பிரியனான ராட்சதன்" என்றும், அவன் மக்களை சேமுடைய மார்க்கத்தை (யேகோவா வணக்கத்தை) விட்டுத் தன் கட்டளையையே கைக்கொள்ள வற் புறுத்தினான் என்றும் விமர்சிக்கின்றன. ஆதி.10:11,12-ல் "அசூர் புறப்பட்டுப் போய் (கல்தேய நாட்டில்) நினிவேயைக் கட்டினான்" என்றிருப்பது (Margin-படி) "அவனே போய் நினிவேயைக் கட்டி னான்" என்றிருப்பதே சரியாகும். நிம்ரோத் தன் மாமனான நினுவின் பெயரால் அதைக் கட்டியிருக்கலாம்.

நிம்ரோத்தின் மரணத்துக்கப்பால் அவன் மனைவியான செமிராமிஸ் விக்கிரகாராதனையையும் பேய் வணக் கத்தையும் உலகம் முழுவதிலும் பரப்பி விட்டாள். இவ்வாறு பாபிலோன் பேய் வணக்கத்தின் தலைமைப் பீடமாய் பல நூற்றாண்டுகளாய் இருந்து வர, கல்தேய பரம்பரையின் கடைசி அரசனும், பாபி லோன் மார்க்கத்தின் பிரதான ஆசாரி யனுமான 3-ம் அத்தாலஸ் பெர்ஸிய சேனைக்குப் பயந்து ஓடின போது அங்குள்ள விக்கிரகங்களைக் கொண்டு சென்று பெர்கமுவை விக்கிரகாராத னைக்கும் பேய் வணக்கத்துக்கும் தலை ஸ்தானம் ஆக்கினான். ஆகையால்தான் கர்த்தர் அதை "சாத்தானுடைய சிங்கா சனம் இருக்கிற இடம்" என்கிறார் (2:13).

(3-ம் அத்தாலஸ் மரிக்கும் போது தன் அதிகாரங்களனைத்தையும் ரோமா புரிக்கு அளித்துவிட்டான். ஆகவே கி.மு.133 முதல் சாத்தானின் சிங்காசனம் ரோமபுரிக்குச் சென்றுவிட்டது. ரோமை அரசர் நாட்டின் தலைவர்களாகவும் பேய் வணக்கத்தின் பிரதான ஆசாரியராகவும் இருந்து வந்தனர்)

பேய் வணக்கத்தின் தலைநகரான பெர்கமு விக்கிரகாராதனையில் எபேசு, சிமிர்னா நகரங்களைக் காட்டிலும் சிறிதும் குறைந்ததல்ல. இங்கு ஏராள மான விக்கிரக ஆலயங்கள் உண்டு. அவற்றில் மிகப் பிரதானமானது எஸ்கு லாப்பியஸ் என்னும் சர்ப்ப தேவனுக் குரியதே. அங்கு வளர்க்கப்பட்ட ஒரு பாம்பைத்தான் ஆரோக்கியமளிக்கும் தெய்வமாக வணங்கி வந்தனர். உலகத் தின் பல பாகத்திலிருந்தும் மக்கள் அங்கு செல்வதுண்டு. அதன் வணக்கம் அரு வருப்பானது. யூப்பித்தர் தேவனுக்கும், அத்தேனே தேவிக்கும் கட்டப்பட்ட பெரிய ஆலயங்களும் அங்கு உண்டு. ஆகவே பெர்கமு நாட்டின் தலை ஸ்தான மாய் மட்டுமல்ல, விக்கிரகாராதனைக் கும், பேய்வணக்கத்துக்கும், அரச வணக் கத்துக்கும், சகல பாவங்களுக்கும் தலை ஸ்தானமாயும் விளங்கிற்று. ஆசியாவில் அரச வணக்கம் ஆரம்பித்ததே இங்கு தான்.

பெர்கமுவிலுள்ள கிறிஸ்தவ சபை

இதைக் குறித்து கர்த்தர் "உன் கிரியைகளையும் .... நீ என் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறதையும் .... எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் ..... விசுவாசத்தை நீ மறுதலி யாமலிருந்ததையும் நான் அறிந்திருக் கிறேன்" என்கிறார் 2:13. பெர்கமு கிறிஸ்தவர்களுக்குச் சோதனை மிகுதி. அங்கு தன் சிங்காசனத்தை நிலைநாட்டி ஆண்டு கொண்டிருந்த சாத்தானை வணங்க நெருக்கினர் ஒரு கூட்டத்தார். ரோமைச் சிங்காசனத்திலிருந்த அரசனை வணங்க வற்புறுத்தினர் அரசியல் தலை வர்கள். ஆகவே, கிறிஸ்தவர்கள் எப்பக்கத் திலும் நெருக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவனுடைய பெயரைக் கர்த்தர் பொன் எழுத்துக் களில் வரைகிறார். அவனுக்குச் சபையில் பதவியோ பட்டமோ, சமுதாயத்தில் பேரோ புகழோ இருந்ததில்லை. அவன் ஒரு சாமானிய கிறிஸ்தவன், ஆயினும் தன் ஆண்டவரை உண்மையாய் நேசித் தான். தன் தருணம் வந்தபோது சத்துரு களுக்கு இணங்க மறுத்தான். அந்திப்பா என்னும் பதத்திற்கு "ஏராளமானவர் களுக்கெதிராய் நின்ற தனி மனிதன்" என்பது பொருள். ஆம், ஏராளமான எதிரி களை அவன் தனிமையாய் எதிர்த்து, உத்தம கிறிஸ்தவனாய் நின்றான். நித்திய மகிமையை நாடி தன் உயிரை அற்பமாய் மதித்தான். உலக மக்களிடம் உயிர்ப் பிச்சை கேட்டு நித்தியத்தை நரகத்தில் கழிக்க அவன் அத்தனை மதிகேடனல்ல. ஆனால் உலோகத்தாலாகிய எருதின் சிலையைப் பழுக்கக் காய்ச்சி, அந்திப் பாவை அதனுள் புகுத்திக் கொலை செய் தார்களாம். சில நிமிட வேதனை சகித்த அந்திப்பா இன்று மகிமையில் ஜீவ கிரீடம் தரித்தவனாய் ஆனந்தகீதம் பாடி மகிழுகிறான்.

பெர்கமு சபையில் காணப்பட்ட இரு பெருங்குறைகளைக் கர்த்தர் விசனத்தோடு எடுத்துக்காட்டுகிறார். இவற்றிலொன்று "விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறுதலை இஸ்ரவேல் புத்திரர் முன் பாகப் போடும்படி பாலாக் என்பவனு க்கு போதனை கொடுத்த பிலேயாமின் உபதேசத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு" என்பதாகும். விசன மான இச்சம்பவம் எண்ணாகமம் 22-25 அதிகாரங்களில் காணப்படுகிறது.

எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ர வேலர் வழியில் தங்களை எதிர்த்த ஜாதி

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

களையெல்லாம் முறியடித்து முன்னேறி, தன் நாட்டையும் சமீபித்து விட்டனர் என்று கண்ட மோவாபிய அரசனான பாலாக், அவர்களை யுத்தத்தில் மேற் கொள்ள முடியாதென்று கண்டதால், அவர்களை சபிப்பதற்காக பிலேயாம் என்னும் தீர்க்கதரிசியை, ஏராளமான வெகுமதிகளை வாக்குப் பண்ணி வரவழைத்தான். அவன் "அநீதத்தின் கூலியை விரும்பி தேவனுடைய செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்தான்" என்கிறார் ஆவியானவர் 2 பேது.2:15. ஆயினும் அவர்களை அவன் சபிக்க தேவன் இடமளிக்கவில்லை.

அரச வெகுமதியை இழந்துபோக விரும்பாத பிலேயாம் பாலாக்குக்கு ஒரு இரகசியத்தைத் தெரிவித்தான். "அந்த ஜனம் தங்கள் தேவனுக்காகப் பிரித்தெடுக்கப்பட்டவர்களாகையால் புற ஜாதிகளோடு கலவாமல் தனித்தே வாழுவார்கள். அவர்களுடைய வெற்றியின் இரகசியம் இதுவே. பிறரோடு கலந்து விடுவார்களானால் தேவனே அவர்களை சபித்துவிடுவார். ஆகையால் உமது பெண்கள் மூலம் அவர்களை வசப் படுத்திக் கொள்ளும்" என்று போதித் தான். பாலாக் தன் எண்ணம் பலித்ததால் களிப்புற்றான். பிலேயாமின் ஆலோ சனையைக் கொண்டு நடத்தினான்.

இஸ்ரவேலின் வாலிபர் மோவா பியரின் தேவனான பாகால்பேயோரின் பண்டிகைப் பலிவிருந்துகளுக்கு அழைக் கப்பட்டனர். அங்கே அவர்கள் புசித்து, குடித்து வெறித்திருக்கையில் இச்சை வெறி கொண்ட மோவாபிய அழகிகளின் அரை நிர்வாண நாட்டியங்களில் மதிமறந்தனர். "இஸ்ரவேலர் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணி .... அவர்கள் தேவர்களைப் பணிந்து கொண்டார்கள்". தேவன் அவர் கள்மேல் கோபங்கொண்டு வாதையை அனுப்பினார். "அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்து நாலாயிரம் பேர்" எண்.25:1,2,9. விக்கிரகாராதனை நிறைந்த பெர்கமுவிலிருந்த கிறிஸ்தவர் களும் இதே சோதனைக்கு இடங் கொடுத்தார்கள்.

இரண்டாவது குறை "நிக்கொ லாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத் திலுண்டு" என்பதாகும் (2:15) நிக்கொலா யர் என்னும் கிரேக்க பதம் "நிக்கேயோ" (கீழடக்கி ஆளுவது) "லாவோஸ்" (Laity) சபையார் என்னும் இருபதங்களின் தொடர்பாகும். சபையில் பணிவிடை செய்ய வேண்டிய தேவ ஊழியர் தேவ னுடைய சபையை ஒரு ஸ்தாபனமாக மாற்றி, அரசாங்கத்தைப் போன்ற ஆளுகை முறையை அதில் புகுத்தி, தாங்கள் சபையாரை ஆளும் தலைவர் களாய் மாறும் தப்பிதத்தையே இது காண்பிக்கிறது. எபேசு இதை வெறுத்தது (2:6) பெர்கமுவோ அதற்கு இடங் கொடுத்தது. கர்த்தர் "அதை நான் வெறுக்கிறேன். நீ மனந்திரும்பு, இல்லா விட்டால் . . . யுத்தம் பண்ணுவேன்" என்றார் (2:15,16).

இன்று பெர்கமு தன் பூர்வ மகி மையை இழந்து, ஒரு சிறிய பட்டண மாய் பெர்கமோ என்றழைக்கப்படுகிறது. மரத்தாலாக்கப்பட்ட சிறிய வீடுகளின் மத்தியில் சில பூர்வீக ஆலயங்களும் காணப்படுகின்றன.

தீர்க்கதரிசன முறையில் பெர்கமு கி.பி.313 முதல் 606 வரையுள்ள சபையைக் குறிக்கும். சாத்தான் 250 ஆண்டு காலமாய் துன்புறுத்தியும், டயோக்கிளீஷியன் மூலம் 10 ஆண்டுகள் தொடர்பாய் வாதித்தும், கிறிஸ்துவின் சபை பக்தி வைராக்கியத்திலும் பரிசுத்த திலும் விசுவாசத்திலும் வளர்ந்ததேயன்றி அழிந்து போகவில்லை. துன்பத்தின் மூலம் அதை அழிக்க முடியாதென்று கண்ட சத்துரு இன்பத்தின் மூலம் அதைக் கெடுக்கத் திட்டமிட்டான். வெளியே சத்துருக்களை எழுப்பி அபஜெய மடைந்த சாத்தான், உள்ளேயே சத்துருக் களை எழுப்பி சபைத் தலைவர்களைக் கொண்டே சபையைச் சீர்கேடடைய செய்தான்.

கி.பி.312-ல் கான்ஸ்டன்டைன் ரோமை சாம் ராஜ்யத்தின் அதிகா ரத்தைப் பெற்றான். அவன் அதிகாரத்தில் உறுதிப்பட வேண்டுமானால் ஒரு பலத்த எதிரியை மேற்கொள்ள வேண்டிய திருந்தது. அதற்கு முந்தின இரவில் கிறிஸ்து சிலுவையோடு அவனுக்குக் காணப்பட்டதாகவும், "இந்தச் சின்னத் தால் நீ வெற்றியடைவாய்" என்ற வார்த்தைகளை அவன் கேட்டதாகவும், அவ்வாறே வெற்றி பெற்றதால் அவன் கிறிஸ்தவனானதாகவும் சொல்லுகிறார் கள். அது உண்மையாயிருக்கலாம்.

ஆனால் ஒன்று தெளிவாய் விளங்கு கிறது. 250 ஆண்டுகளாய் ரோமை அரசு தன் முழு வல்லமையையும் பயன் படுத்தியும் கிறிஸ்துமார்க்கம் வளர்ந்து கொண்டே வருவதன் இரகசியம் என்ன என்பதை அவன் சிந்திக்கத் தொடங்கி னான். அதை அறிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தோடு கிறிஸ்தவர் களுடன் சற்று தொடர்பு கொண்டான். அதன் மூலம் விக்கிரகாராதனைக் காரரான தன் குடிகள் உண்மையற்றவர் களும் நம்பப்பட தகாதவர்களும் கலக குணமுள்ளவர்களுமாயிருப்பதையும், கிறிஸ்தவர்களோ தீங்கற்றவர்களும், சமாதானப்பிரியரும், முற்றிலும் நம்பப் படத்தக்க உண்மையுள்ளவர்களுமா யிருப்பதையும் கண்டுகொண்டான். ஆகவே பிறரிடம் இல்லாத ஏதோ ஒன்று கிறிஸ்தவர்களிடம் இருக்கிறது என்று கான்ஸ்டன்டைன் உணர்ந்தான். எனவே 313-ல் தன் குடிகள் தங்கள் விருப்பப்படி எந்த தேவனையும் வணங்கிக் கொள் ளலாம் என்று விளம்பரம் செய்தான்.

முந்திய அரசர்கள் சாம்ராஜ் யத்தை இணைத்துக்கட்ட விக்கிரகாராதனையே ஏற்றது என்று நம்பியதால் கிறிஸ்தவர் களை அழிக்க துணிந்தனர். இவனோ தன் பரந்த நாட்டில் ஒற்று மையை உருவாக்க கிறிஸ்தவர்களின் மதமே உதவும் என்று கண்டு, கி.பி.324-ல் பேய் வணக்கத்துக் கெதிரான சட்டம் ஒன்றை இயற்றிய தோடு, தன் நாடு முழுவதிலும் கிறிஸ்து மார்க்கத்தைப் பரப்பத்தக்கதாக உழைக் கவும் துணிந்து விட்டான். ஆயினும் இது வெறும் அரசியல் தந்திரமே. அவன் மதம் மாறி யும் மனம் மாறவில்லை. அவன் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டதா கவோ ஞானஸ்நானம் பெற்றதாகவோ எவ்வித ரேகையுமில்லை. (மரணப் படுக்கையில் ஞானஸ்நானம் பெற்றதாக Gibbon என்னும் சரித்திராசிரியன் கூறுகி றான்) மேலும் பேய் வணக்கத்தின் பிரதான ஆசாரியனாகப் பெற்றிருந்த பட்டத்தை சாகுமளவும் அவன் விடவு மில்லை. ஆகவே, அவன் கிறிஸ்து சபைக் கும் பேய் வணக்கத்துக்கும் தலைவனாக வும் இரண்டையும் ஒன்றாய்க்கட்டி இணைக்கும் ஒரு மனிதனாகவுமே விளங்கினான்.

அரசாங்கத்தால் துன்புறுத்தப் பட்ட சபை இப்போது அரச ஆதர வையே அடைந்துவிட்டது. பாபிலோன் மார்க்கத்தாரின் உயர்ந்த பதவிகளில் கிறிஸ்தவர்கள் அமர்த்தப்பட்டனர். விக்கிரக ஆலயங்கள் கிறிஸ்தவ ஆலயங் களாக மாற்றப்பட்டன. அங்குள்ள ஆசாரியர்களின் அலங்கார ஆடைகள் கிறிஸ்தவ ஊழியருக்கு அளிக்கப்பட்ட தோடு அவர்கள் அரசாங்கச் சம்பளமும் பெற ஆரம்பித்தனர். உபத்திரவத்துக்கு பதிலாக உன்னத பதவிகளும், எளி மைக்குப் பதிலாக ஆடம்பர வாழ்க்கை யும், வறுமைக்குப் பதிலாகச் செல்வ செழிப்பும் ஏற்பட்டன. வீடுகளில் கூடி ஜெபித்தவர்கள் அலங்காரமான ஆலயங் களில் அமர்ந்து ஆராதிக்க ஆரம்பித்தனர்.

அரச தயவை நாடியும், பதவிகள் நிமித்தமாகவும் சிலவேளைகளில் பட்ட யத்துக்குப் பயந்தும் மக்கள் ஞானஸ் நானம் பெற்றுக் "கிறிஸ்தவர்கள்" ஆக மாறினர். அறிவாளிகளான விக்கிரகாரா தனைக்காரர், பூசாரிகள் முதலியோரிடம் சபைகள் ஒப்படைக்கப்பட்டன. அவர் களுக்கு மார்க்கத்தின் முலோபதேசங் களே தெரியாது. ஆவியோடு ஆராதிப்ப தற்குப் பதிலாக மனதைக் கவரத்தக்க ஆராதனை ஒழுங்குகள் அமைக்கப் பட்டன. பாபிலோன் மார்க்கத்தின் முறைகளும் சடங்குகளும், மக்களின் விருப்பத்தை நிறைவேற்றவேண்டி சபைகளுக்குள் புகுத்தப்பட்டன.

ரோமாபுரியில் அலங்காரமான ஓர் ஆலயத்தில் சிறந்த சலவைக் கற்களால் அமைக்கப்பட்டு பொன்னாலும் விலை யேறப்பெற்ற கற்களாலும் அலங்கரிக்கப் பட்ட மேடைமேல் அரசன் அமருவதற் காக சிறந்த சிங்காசன மொன்றும், அதன் முன்னால் சற்று தாழ்வாக ரோமாபுரி அத்தியட்சர் அமருவதற்காக இன் னொரு அழகிய சிங்காசனமும் அமைக் கப்பட்டன.

இவ்வாறாய் வழி தப்பிப்போன சபையில் பிலேயாமின் போதகமும் நிக்கொலாயரின் உபதேசமும் நுழைந்தது அதிசயமல்ல. பிரிந்து வாழவேண்டிய தேவஜனம் மோவாபியரோடு கலந்துற வாடி தேவ கோபத்தால் அழிய வழி

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

வகுத்ததே பிலேயாமின் போதனை. இக்காலத்தில் (313-606) சபைக்கு ஏற்பட்ட ஆபத்தும் இதுவே. சபை (எக்ளீஸியா) என்னும் கிரேக்க பதத்தின் கருத்து "வெளியே அழைக்கப்பட்ட வர்கள்" என்பதே. நமதாண்டவர் தமது சீஷரைப் பார்த்து "நீங்கள் உலகத்தாரா யிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தா ராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து (பிரித்தெடுத்து) தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது" என்றார் யோவா.15:19.

"உலகத்திலும் உலகத்திலுள்ளவை களிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத் தில் பிதாவின் அன்பில்லை" என்பது கிறிஸ்தவனுக்குக் கொடுக்கப்பட்டிருக் கும் கண்டிப்பான கட்டளையாகும் 1 யோவா.2:15. ஆகையால்தான் பூர்வ விசுவாசிகள் "பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு குறைவையும் உபத்திர வத்தையும் துன்பத்தையும் அனுபவித் தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திர மாயிருக்கவில்லை" எபி.11:16,37,38.

பெர்கமு காலக் கிறிஸ்தவர்களோ "ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசை வேது? அவிசுவாசியுடனே விசு வாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயங்களுக் கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது" என்பதை உணரவேயில்லை 2 கொரி. 6:14-7,1 "நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது" என்பதை (பிலி.3:20) மறந்து, உலகத்தையே தங்கள் நித்திய குடியிருப்பு என்று எண்ணி, உலக மக்களோடு மிஞ்சிய உறவு கொண்டனர். கிறிஸ்துவோடு உன்னதங்களில் உட்கார வேண்டிய சபை (எபே.2:7) உலகத்தி லேயே படுத்துக்கொண்டது.

பெர்கமு என்னும் பதம் "மணம் முடித்தவள்" என்னும் பொருள்படும். மகிமையின் மணவாளன் வந்தழைத்துச் சென்று மத்திய வானில் வைத்து மணம் முடித்துக்கொள்ளும் மகத்துவ நாள் மட்டும் மாசற்ற கன்னிகையாகத் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டிய சபை (2 கொரி.11:2) அழகும் புகழும் செல்வமும் செல்வாக்கும் சீரும் சிறப்பு முடையதாய் தோன்றிய ரோமை அரசாங்கம் என்னும் மணவாளனுக்குத் தன்னைக் கையளித்துவிட்டதால் கிறிஸ்துவுக்கு துரோகம் செய்து வேசியாகிவிட்டது. இந்த சபைக்கு கான்ஸ்டன்டைன் அரசன் தேசிய சபை அல்லது சர்வலோக சபை என்ற கருத்துள்ள "கத்தோலிக்க சபை" என்ற பெயரைச் சூட்டினான்.

இக்காலத்தில் கிறிஸ்துவின் சபை ஆதி அப்போஸ்தல காலத்தை முற்றிலு மாய் மறந்து, பாபிலோன் மதத்திலுள்ள சகல சடங்காச்சாரங்களையும் கடன் வாங்கி, சற்று மாற்றியமைத்து தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டது. முதன் முதலாவதாக 320-ல் ஆலயத்தில் மெழுகு வர்த்தி வைக்கும் வழக்கம் நுழைந்தது. அதைத் தொடர்ந்து ஏராளமான சடங்குகள் ஒவ்வொன்றாய் நுழையவே, கிறிஸ்து சபைக்கும் விக்கிரகாரா தனைக்கும் வித்தியாசம் தெரியாமலாகி விட்டது.

பற்பல பண்டிகைகளைக் கொண் டாடி புசித்து குடித்து வெறித்து பாடி ஆடி களித்த ரோமர், கிறிஸ்தவர்களுக்குப் பண்டிகைகளே இல்லாததால் சோர் படைந்தனர். அவர்களைத் திருப்திப் படுத்த பண்டிகை நாட்களை ஏற் படுத்தும் பிரச்சினை ஏற்பட்டது. சூரியன் தெற்கே சென்று மறைந்து, பின்பு வடக்கே திரும்பும் நாளாகிய **டிஸெம்பர் 25-ம் தேதியை பாபிலோன் மதத்தவர் சூரிய தேவனின் பிறந்த நாளாய் கொண்டாடி வந்தனர்.** அந்நாளே கிறிஸ்து பிறப்பு பண்டிகைத் தினமாய் மாற்றப் பட்டது. (குளிர் காலமான டிஸெம்பரில் பாலஸ்தீன மேய்ப்பர் தங்கள் மந்தை களை வயல்வெளிகளில் தங்க வைப்ப தில்லை. ஆகவே இயேசு டிஸெம்பரில் பிறக்கவேயில்லை என்று வேதசாஸ்திரி கள் சாதிக்கின்றனர்)

இன்றும் டிஸெம்பர் 25-ம் தேதியைத் தங்கள் ஆண்டவரின் பிறந்த தினமாக பயபக்தியுடன் கொண்டாடு கின்றனர் பலர். ஆனால் உண்மை எது? வருடத்தின் சகல நாட்களிலும் அந்த நாளைப் போல் கூடுதல் மதுபானம் செலவாகும் நாள் வேறு எது? அந்த நாளைப்போல் கூடுதல் ஆடு, மாடு, பன்றி, கோழி கொல்லப்படும் நாள் வேறு எது? அந்த நாளைப் போல் கிறிஸ்த வர்கள் (ஆடைகளுக்காக) கடன்படும் நாள் வேறு எது? பெர்கமு காலக் கிறிஸ்த வத்தின் பலன் இவை!

பாபிலோனிய மதத்தில் செமிரா மிஸ் "தேவ மாதா" "பரலோக மாதா" "வானராக்கினி" "நித்திய கன்னிகை" என்னும் நாமங்களால் வணங்கப் பட்டாள். கிறிஸ்து சபையும் இயேசுவின் தாயை அதே நாமங்களால் வணங்கி, மரியாள் பெயராலும் பண்டிகை நாட்களை ஏற்படுத்திற்று.

செமிராமிஸ் சில இடங்களில் அஸ்ற்றாட்டி என்றும் அஸ்தரோத் என்றும் இஸ்டார் என்றும் அழைக்கப் படுவதுண்டு. அவள் பெயரால் மார்ச் மாதத்தை அடுத்து ஆறுவார நோன்பும் அதைத் தொடர்ந்து ஒரு பண்டிகை விருந்தும் பாபிலோனியருக்கு உண்டா யிருந்தது. அதை ஒட்டியே கிறிஸ்து சபையில் தபசு நாட்களும் உயிர்த் தெழுந்த பண்டிகையும் ஏற்படுத்தப் பட்டன. ஈஸ்டர் என்பது இஸ்டார் என்னும் அஸ்தரோத் தேவியின் பெயரின் மருபேயன்றி வேறல்ல.

பெர்கமு கால சபையில் நிக்கொலா யாரின் உபதேசமும் அதிக தீமையை உண்டுபண்ணிவிட்டது. சபை ஊழியர் அரச ஆதரவையும் அரசாங்க நம்பளத் தையும் பெற்று செல்வாக்கடைந்து, சபைகளை ஆளுகை செய்யும் தலைவர் களாய் மாறிவிடவே, சபைகளுக்குள் ஒரு அரசியல் சூழ்நிலை உருவாகிவிட்டது. சங்கங்களும் சட்ட திட்டங்களும் அதிகாரங்களும் ஆளுகைகளும் ஏற் பட்டன. சபை ஆவியானவரால் ஆளப் படுவதற்குப் பதிலாக சட்டங்களால் ஆளப்படும் ஒரு ஸ்தாபனமாக மாறிற்று.

அதோடு பட்டம் பெற்றவர்கள், பட்டம் பெறாதவர்கள் என்கிற ஒரு பெரிய பிரிவினையும் இக்காலத்தில் ஏற்பட்டதே. தற்காலைத்தைப் போல் வேதபுத்தகங்கள் இல்லாத அக்காலத்தில், சபையின் மக்களும் பட்டம் பெற்றவர் களுக்கும்மட்டும்தான் தெய்வீக அறி வோ அனுபவமோ அதிகாரமோ உண்டு என்று நம்பி அஞ்சி அடி பணிந்தனர்.

நமதாண்டவர் "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக் கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக் கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக் கிறார்" என்று திட்டவட்டமாய் கட்டளை கொடுத்திருந்தும் (மத்.23:9,10) தேவ ஊழியர் தங்களைப் "பிதாக்கள்" என்றும் "குருக்கள்" என்றும் அழைக்க தலைப்பட்டார்கள். தங்கள் ஆண்ட வரின் கட்டளையை தாங்கள் மீறுவதாக அவர்கள் உணரவேயில்லை.

வேதபுத்தகத்தில் ஒரே ஒரு இடத்தில் தேவனை பற்றி "அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது" (Holy and REVEREND is His name) என்று எழுதப்பட்டிருக்கிறது சங்.111:9. இந்தப் போதகர்கள் இதே அடைமொழியை (Rev.) தங்கள் பட்டப்பெயராய் தரித்துக் கொண்டனர். சிலரோ இதுவும் போதா தென்று தங்களுக்கு "மகா பயங்கர மானவர்" என்னும் பட்டத்தையும் சூட்டிக் கொண்டனர். இவ்வாறாகத் தங்களை தேவனுக்கு சமமானவர்களாக வும், தேவனைக் காட்டிலும் பெரியவர் களாகவும் பாவித்துக் கொண்டனர். சிலர் ஆண்டவர் என்றே அழைக்கப்பட்டனர். தேவனுக்குச் சமமானவர்களாய் கருதப் பட்ட இவர்களுக்கு சபையார் அடி பணிந்தது அதிசயமல்ல; ஆனால் சபை யின் தலைவரான கர்த்தரோ கோப மடைந்து "நீ மனந்திரும்பு, இல்லா விட்டால் நான் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்" என்றார் 2:16.

இக்காலத்தைக் குறித்த உவமை மத்.13:31,32-ல் காணப்படுகிறது. "பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்து தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறியதாயிருந்தாலும் வளரும்போது சகல பூண்டுகளிலும் பெரிதாகி ஆகாயத்துப் பறவைகள் அதன் கிளைகளில் வந்து அடையத்தக்க மர மாகும் என்றார்".

இங்கு "பரலோகராஜ்யம்" என்னும் பதம் "வெளிப்படையான கிறிஸ்தவம்" என்றும் கருத்துடையது.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

இந்த விதை (அடைக்கப்பட்ட) தோட்டத்தில் (உன்.4:12) போடப்படுவதற்குப் பதிலாய் "நிலத்தில்" போடப்பட்டது. நிலம் உலகம் 13:38. மேலும் கடுகு ஒரு சாதாரண செடி; அது ஆகாயத்துப் பறவைகள் வந்தடையத்தக்க ஒரு பெரிய மரமாவதென்றால் அது இயற்கைக்கு மாறானதே. இது கான்ஸ்டன்டைன் காலத்தில் சபைக்கு ஏற்பட்ட அசாதாரண வளர்ச்சியைத்தான் காண்பிக்கிறது. சபை ஆவிக்குரியதாயிருந்தும், உலகத்தில் அமர்ந்து, உலகத்தில் வேரூன்றி, உலகத்தைப் பற்றிப்பிடித்து உலகத்தின் பெலத்தால் நிலைநின்று உலகத்தின் ஜீவனை உறிஞ்சி அசாதாரண வளர்ச்சியை அடைந்துவிட்டது.

இங்கு "பறவைகள்" சாத்தானின் சேனையைத் தான் குறிக்கும் 13:4, 19 பார்க்க. அவை சுயநலத்தோடு மட்டுமே நிழலுக்காகவும், கனிகளுக்காகவும் மரத்தில் வந்தடையும். அரச தயவையும் உத்தியோகத்தையும் எதிர்பார்த்து, விக்கிரகாராதனைக்காரரான ஏராளம் மக்கள் இக்காலத்தில் சபையில் அடைக்கலம் புகுந்தனர். இப்பறவைகளால் மரம் அசுத்தமடைவதுபோல, இந்தப் பேர்க் கிறிஸ்தவர்களால் சபை முற்றிலும் கறைப்பட்டு சீர்கெட்டுவிட்டது. அந்த நிலைமை இன்றுவரையிலும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டு கிறிஸ்தவ சபையே, உன் உண்மை நிலையை நீ சரியாய் அறிந்து கொள்வாயானால் நலமாயிருக்கும். நீ, திசை தவறியதை அறியாமல் மறைந்திருக்கும் பாறைக்கு நேராய்த் தீவிரிக்கும் கப்பல் போலிருக்கிறாயே! உனக்குள்ளிருக்கும் கோடிக் கணக்கான மக்கள் அக்கரை சேரலாம் என்று நம்பிக்கொண்டே நடுக்கடலில் மடியப் போகின்றனரே! நீ நான்காம் நூற்றாண்டிலேயே திசை தப்பி விட்டாய். உன்னை நம்பியிருக்கும் மக்களின் ஆத்துமாக்களைக் குறித்த உன் உத்தரவாதத்தை உணருகிறாயா? "நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்கும் மக்களுக்குப் பேதுரு அப்போஸ்தலன் கொடுத்த ஆலோசனையைத் தெளிவாய் விளக்கிக் கொடுக்கிறாயா? அப்.2:33-40. "அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" யாக்.3:1.

சபையை கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் கிறிஸ்தவனே, உன் சபைப் பக்தி உன்னைப் பரலோகம் கொண்டு சேர்க்கும் என்று எண்ணிக் கொண்டிருந்து ஏமாந்து போகாதே; உன் சபை விழுந்து போனது. பிசாசோடும் உலகத்தோடும் உறவு கொண்டு புறக் கணிக்கப்பட்டது. அதன் உபதேசங்கள் பாபிலோன் உபதேசத்தின் கலவை; களங்கமற்ற தேவ வசனத்துக் கொத்தவையல்ல. உன் ஆண்டவரின் ஆசீர்வாதம் "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு" - தனி மனிதருக்கே வாக்களிக்கப்பட்டிருக்கிறது. உன் வாழ்க்கையில் வெற்றி உண்டா? தினந்தோறும் பிசாசு, மாம்சம், லோகத்தின் மேல் ஜெயங்கொள்ளுகிறாயா? 2:17.

ஜெயங்கொள்ளுகிறவனுக்கு இரண்டு ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப்படுகின்றன. ஒன்று "மறைவான மன்னா". நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே" என்றவர்களிடம் இயேசு "என் பிதா வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்கு கொடுக்கிறார்.... ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்" என்றார் யோவா.6:31-35. இந்த இயேசுவை உலகம் அறியவில்லை; ஆகவே அவர் உலகத்துக்கு மறைவான மன்னா. இந்த இயேசு உன் ஜீவனாய் உனக்குள்ளே வசிக்கிறாரா? "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்றும், "நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றும் நீ சொல்லக்கூடுமா? பிலி.1:21; கலா.2:20.

இரண்டாவது ஆசீர்வாதம் வெண்மையான குறிக்கல்லும், அதில் எழுதப்பட்ட புதிய நாமமுமாகும். பரீட்சையில் வெள்ளைக்கல் வெற்றியையும் கறுத்தக்கல் தோல்வியையும் காண்பிக்கும். குற்றவாளிக்கு வெள்ளைக்கல் விடுதலைக்கும் கறுத்தக்கல் ஆக்கினைக்கும் அடையாளமாகும். ஒரு வெள்ளைக் கல்லை இரண்டாய் உடைத்து ஒரு பகுதியில் தன் பெயரை எழுதிக் கொடுத்தால் அதன் கருத்து "நானும் நீயும் ஒன்று, உன் எந்த ஆபத்திலும் நான் உனக்கு உதவி செய்வேன்" என்பதே.

கிறிஸ்தவ வெற்றி என்னும் ஒன்றையே இலக்காய்க் கொண்டு, கொடிய துன்பங்களையும் தொல்லைகளையும் பொறுமையாய்ச் சகித்துக் கொண்டு முன்செல்லும் கர்த்தருடைய பிள்ளையே, உன் ஆண்டவர் உன்னைப் பார்த்து "பயப்படாதே, நான் உன்னோடிருக்கிறேன்" என்கிறார். இது உனக்குப் போதாதா?

குறிப்பு:

இதன் தொடர்ச்சி, டிசம்பர் மாதம் வெளிவருவதால், இந்த கட்டுரையை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

நாம் ஆபத்தான ஒரு காலாச்சார காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக இது கெட்ட குறிகளைக் காட்டும் காலமாயிருக்கிறது. நாம் வாழும் சமுதாயம் ஆண்டவரையும் அவரது வார்த்தையையும் அவமதிக்கிற ஒரு சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அநேக கிறிஸ்தவ குடும்பங்கள் இக்கலாச்சாரங்களுக்கு அடிமைப்பட்டு விட்டன. பிள்ளைகளிடம் மிக முக்கியமானது என்ன வென்று கேட்டால் அவர்களுடைய பதில் உங்களை திடுக்கிடப் பண்ணலாம். பெற்றோரே, நமது பிள்ளைகளுக்கு நல்ல பயிற்சி அளிக்க கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

எழுப்புதலுக்காக இதய கதறல் 2022
Heart cry for Revival 2022

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	08.12.22 Saturday	St. Johns C.S.I மலைக்கோடி, Vellore
பெப்ரவரி	12.02.22 Saturday	Church of God Srivilliputhur
மார்ச்		
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்	15.08.22 Monday	Zion Prayer House Villivakkam, Chennai
செப்டம்பர்	09.09.22 Friday	Jesus Cares Assembly Anna Nager, Chennai
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

மீட்பின் அன்பு அதைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களின் தகுதியைப் பொறுத்ததல்ல. அந்த **அன்பு** மிகவும் தீயவர்களுக்கும் படித்தவர்களுக்கும் நல்ல கலாச்சாரமுடையவர்களுக்கும் ஒன்றுபோல எட்டுகிறது.

ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவன் ஆத்தும ஆதாயத்தில் விருப்பமுள்ளவனாக இருப்பான். ஏனெனில் இந்த **அன்பு** பரிசுத்த ஆவியால்தான் உருவாகிறது.

மீட்கும் அன்பு செயல்முறையில் இடுக்கண்களிலிருந்து மக்களுக்குத் தீர்வு காணவும், உடைந்த உறவுகளைச் செப்பனிடவும் உதவுகிறது.

ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் இரட்சிக்கப்படாதவர்களை கிறிஸ்துவின் மறுரூபப்படுத்தும் **அன்புக்குள்** கொண்டு வரவும் தங்கள் உடன் விசுவாசிகளுக்குச் சேவை செய்யவும் கடன்பட்டவர்கள்.

ஒவ்வொரு விசுவாசியும் மரத்தின் கிளையாக எஜமானுக்கு **கனி**யையும் ஆசீர்வாதத்தையும் மகிமையையும் கொண்டு வர வேண்டும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason